Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

STC No.2822/2023

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-2<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | கோபிநாத் |
| Father's Name | : | முத்துசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 13.11.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் கரூர் வைஸ்யா வங்கி கரூர் மெயின் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக அழைப்பாணை வரப்பெற்றதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். எனது employe ID Card நகல் தாக்கல் செய்கிறேன். **அது சா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

2) இவ்வழக்கு சம்மந்தமாக எதற்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது என்றால் MGS கோவிந்தராஜலு செட்டியார் அண்டு சன்ஸ் நிறுவனம் எதிரிக்கு கொடுக்கப்பட்ட 7 காசோலைகள் வசூலுக்கு செலுத்தப்பட்டு பணமாக்கப்பட்டது சம்மந்தமாக அழைப்பாணை வரப்பெற்றது. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள 7 காசோலைகளில் 4 காசோலைகள் மட்டும் அதாவது 11.08.2014 என குறிப்பிடப்பட்ட காசோலை எண். 13340 கடந்த 12.08.2014 ம் தேதியிலும், 25.08.2014 என குறிப்பிடப்பட்ட காசோலை எண்கள். 13410, 13411, 13412 கடந்த 25.08.2014 ம் தேதியிலும், எதிரியால் மேற்படி காசோலைகள் எங்களது கரூர் மெயின் கிளையில் வசூலுக்கு கொடுக்கப்பட்டு அந்த தொகை எங்கள் கிளையில் உள்ள எதிரியின் கணக்கில் வரவு செய்யப்பட்டது.

3) மேற்படி நான்கு காசோலைகளில் தலா ரூ.1 இலட்சம் என பூர்த்தி செய்யப்பட்டு கொடுக்கப்பட்டது. **மேற்படி எங்களது வங்கி கிளையில் பராமரிக்கப்பட்டு வந்த மேற்படி 4 காசோலைகளும் பிரதி நகல்கள் – (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது – 4 எண்ணிக்கை ) சா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது–** காசோலை எண்கள். 13342, 13343, 13344 MGS கோவிந்தராஜலு செட்டியார் அண்டு சன்ஸ் நிறுவனம் எதிரிக்கு தலா ரூ.1 இலட்சம் கொடுத்த காசேலைகள் ஆகும். மேற்படி காசோலைகள் எதிரியால் வேறு வங்கியால் வசூலுக்கு செலுத்தப்பட்டு அவற்றின் ஒளி நகல் எங்கள் வங்கிக்கு அனுப்பட்டு அதன் பேரில் 11.08.2014 ம் தேதி வசூலாக்கப்பட்டது.

4) அந்த காசோலைகள் வைப்பீடு செய்யப்பட்ட வங்கியில் தான் இருக்கும். அந்த ஒளி வடிவ நகல் 10 வருடங்களுக்கு மேலான நிலையில் அதனுடைய நகலை எங்களால் எடுக்க முடியவில்லை. இது சம்மந்தமாக எங்களது வங்கியின் மத்திய clearing பிரிவில் கடந்த 06.11.2025 ம் தேதியன்று மின்னஞ்சல் மூலம் கேட்கப்பட்டபோது cheques prior to 2015. image retrieval not available with CCO என குறிப்பிட்டு மின்னஞ்சல் மூலம் பதில் அனுப்பட்டது. **அந்த மின்னஞ்சல் நடவடிக்கைகளில் அச்சிடப்பட்ட நகல் சா.சா.ஆ– 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**5)** MGS கோவிந்தராஜலு செட்டியார் அண்டு சன்ஸ் நிறுவனம பராமரிக்கப்பட்ட காலம் 10.08.2014 முதல் 26.08.2014 வரை எங்களது வங்கி கணினியில் பராமரித்து வந்த கணக்கு எண். 114211500000024 ன் கணக்கு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **அந்த பராமரிக்கப்பட்ட கணக்கு எண். 114211500000024 கணக்கு பட்டியல் சா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது–** இந்த கணக்கு பட்டியலில் 7 காசோலைகளும் பணமாக்கப்பட்டதற்கான குறிப்புகள் உள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.